**பண்டாரவெல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியன் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, பண்டாரவெல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி ரூபா 46,387 தொகை குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு மீதி அந்த பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி ரூபா 523,780 தொகை எனினும் ரூபா 578,780 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 55,000 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கடந்த ஆண்டுகளை சேர்ந்த ரூபா 41,851 இற்கான ஊழியர் பிணை வைப்பு நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யாமையால் அப்பெறுமதியினால் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் என காட்டப்பட்டிருந்த அட்டவணைகளின் கூட்டுத்தொகை ரூபா 55,473 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை பொறுப்புக்கள் அந்த பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் பதவியணிக்கடன் மற்றும் நிர்மாணவேலை கடன் அட்டவணையின் பிரகாரம் மீதிகளில் ரூபா 5,268,070 இற்கான இணங்காமை ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 30,466,605 தொகை பெறவேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருட காலம் கடந்திருந்த நிலுவை வீதவரி ரூபா 890,892 தொகை, 02 வருடத்தை உடைய நிலுவை மூலதன உதவி ரூபா 16,244,643 தொகை, 02 வருட காலம் கடந்திருந்த நிலுவை ஏனைய வருமானங்கள் ரூபா 12,331,070 தொகை என்பன அடங்கியுள்ளன.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,977,984 தொகைக்கான செலுத்த வேண்டிய மீதியில் 03 வருட காலம் கடந்துள்ள செலவுக் கடன்கொடுத்தோர் ரூபா 21,759,556 தொகை 03 வருட காலம் கடந்துள்ள நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் ரூபா 218,428 தொகை என்பன மீளாய்வாண்டின் போது தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

காணிகள் கட்டிடங்களின் காணி உறுதிகள், சாட்டுதல் கட்டளைகள் ஆகிய நிலையான சொத்துக்கள் பதிவேடுகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகள் மற்றும் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 8,754,170 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மாங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) | 49,850 | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் அங்கீகாரம் இன்றி பெற்றுக்கொள்ளாமல் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக பிரதேச சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1978 இன் 48 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் மற்றும் 1986 மார்ச் 10 திகதிய வர்த்தமானி இலக்கம் 392/9 கட்டளை 67 | | 2012 ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 திகதி வரை 229 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் 30 விண்ணப்பங்கள் மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை விதி 218 | | ஆண்டிற்கு ஒரு முறை காணிகள் மற்றும் கட்டிடங்களை பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், குறிப்பிட்ட கணிப்பீடு நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை யில் xxiv ஆம் அத்தியாயத் தின் பிரிவு 4.6 | 276,243 | இறந்துள்ள, சேவையை விட்டு சென்றுள்ள, சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள மற்றும் சேவையை விட்டு சென்றுள்ள 05 உத்தியோகத்தர் களிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்திருக்க வில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 | 15,400 | முன்னைய ஆண்டிற்கான மதிப்பளிக்கப்படாத காசோலை ஒன்று தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 571 | 138,797 | 02 வருட காலத்தை கடந்துள்ள 11 வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய PF/437 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | 367,435 | மோட்டார் வாகனங்களை காப்புறுதி செய்யும் போது நேரடியாக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ள ப்பட வேண்டுமெனினும் காப்புறுதி முகவர் மூலம் வாகனக் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,306,215 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,002,361 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 287,200 | 287,200 | 353,523 | 890,892 | 425,200 | 425,200 | 248,506 | 729,945 |
| (ii) வாடகை | 290,000 | 290,000 | 450,223 | - | 290,000 | 290,000 | 389,400 | - |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 13,999,200 | 13,999,200 | 19,162,117 | 16,266,642 | 14,161,115 | 14,161,115 | 14,151,616 | 9,448,148 |
| மொத்தம் | 14,576,400 | 14,576,400 | 19,965,863 | 17,157,534 | 14,876,315 | 14,876,315 | 14,789,522 | 10,178,093 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 14.6 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 20.0 மில்லியன் தொகை ஆகும். வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 17.1 மில்லியன் வருமானம் ஒன்று சேகரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 68.5 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

#### 2.2.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 9,619,985 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் 2,669,085 உம் மாகாண சபையில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலனோம்பு ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

ஆக்கப்பட்டிருந்த துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகளுக்காக 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

#### (ஆ) நிலை பேறான அபிவிருத்தி குறிக்கோள்

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மீது சபை அறிந்திருக்காத காரணத்தினால் அக் குறிக்கோள்களுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேண்படுத்துவதற்கான நீண்டகால திட்டங்கள் 2018 திகதி வரையும் தயாரித்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

நேர் தொழில் நிர்மாண வேலையின் கீழ் மூன்று நிர்மாண வேலைகளுக்காக மதிப்பீட்டின் பிரகாரம் பண்டங்கள் கொள்வனவு செய்திருக்காமையால் ரூபா 189,210 தொகை பெறுமதியான பண்டங்கள் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 ஊழியர்களின் மிகை மற்றும் 03 ஊழியர்கள் வெற்றிடமும் காணப்பட்டது.

### 3.4 பெறுகை

#### 3.4.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### 3.4.2 வழங்கள் மற்றும் சேவைகள்

(அ) பண்டாரவெல பிரதேச சபையினால் 2017 ஆண்டு ஜனவரி முதல் திசெம்பர் 30 திகதி வரை ரூபா 1,797,994 இற்கான கொள்வனவு சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) விலைமனு அழைப்புக் கடிதங்கள் பதிவுத் தபாலின் மூலம் அனுப்பப்பட வேண்டும். எனினும் கையினால் ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கையினால் ஒப்படைப்பதற்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3(ஆ)(II) பந்தியின் பிரகாரம் பெறுமதி குறைந்த பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக வருடாந்த வழங்குனர்கள் பதிவு செய்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டு கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த 06 வருமான விடயங்களில் முரண்கள் 54 சதவீதம் முதல் 765 சதவீதம் வரையான வீச்சிலும் 05 செலவு விடயங்களில் முரண்கள் 31 சதவீதம் முதல் 296 சதவீதம் வரை வீச்சிலும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது பிரதேச சபை தொடர்பாக போதிய உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | குறைபாடு |
|---|---|---|
| (அ) | உள்ளகக் கட்டுப்பாடு | பிரதேச சபை உத்தியோகத்தர்களிடையே கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பகிரப்பட்டு சாட்டப்பட்டிருக்காமை. |

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு

(i) களஞ்சியப் பண்டங்களுக்காக இருப்புப் பதிவேடுகள் பேணியிருக்காமை.

(ii) உடனடியாக சரியான தன்மையை பரிசோதனை செய்வதற்காக உரிய விதமாக பண்டங்கள் களஞ்சியப்படுத்தியிருக்காமை.

(iii) நிர்மாண வேலைகளுக்காக களஞ்சியத்தில் இருந்து பண்டங்கள் வழங்குதல் மற்றும் கொள்வனவு செய்வதற்காக தேவை கோரிக்கை பத்திரம் பெறுவனவு கட்டளைகள் உரிய விதத்தில் பதிவு செய்திருக்காமை

(iv) பல்வேறு நிர்மாண வேலைகள் சங்கங்களுக்கு வழங்கியிருந்த பண்டங்கள் களஞ்சியத்தாலே சேகரிக்கப்பட்டிருத்தல்.